
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அற்புதப் பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் அற்புதப் பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## அநுபவம் ஆற்றாமை

அற்புதம் – அதிசயம். வியப்பு. இறைவன் தம்மை ஆண்டருளியது இயற்கையில் நிகழத்தக்க ஒன்றாக நினையாது, என்றும், எங்கும் இல்லாததொரு புதுமையுடையதாகக் கருதுதலின், அதனை எடுத்தோதியருளிய பத்துப் பாடல்களின் தொகுதி இது.

இஃது மாணிக்கவாசகரின் உள்ளத்தில் அடங்காததோர் அற்புதமாய்த் தோன்றலின், முன்னர் `அதிசயப் பத்து` என அருளிச் செய்தததனோடு அமையாது, பின்னும் `அற்புதப் பத்து` எனப் பத்துத் திருப்பாடல்கள் அருளிச் செய்தார். யாப்பு வகையும் வேறுபடாமை காண்க.

இங்ஙனமே, `கல்வி` எனக் கூறிய பத்துக் குறள்களில் கல்வியின் பெருமை அடங்காமை கருதித் திருவள்ளுவரும், அதனையே `கல்லாமை` என வேறு பத்துக் குறள்களால் கூறுதல் காண்க.

`கல்வி, கல்லாமை` என் பன உடன்பாடும், எதிர்மறையுமாய்ச் சொல் வேறுபாடுடைய எனினும், பொருட்கண் வேறுபாடின்மை யறிக.

அதிசயப்பத்திற்கு, `முத்தி இலக்கணம்` எனக் குறிப்புரைத்த முன்னோர் இதற்கு, `அநுபவம் ஆற்றாமை` என உரைத்தனர்.

`ஆற்றாமை – தம் தகுதிக்கு மேற்பட்ட தாதல்`. அங்ஙனமாயின், இஃது அதிசயப்பத்தின் பின்வைக் கற்பாலது எனின், பிறபொருள்

இடையிட்டு வருதலே நன்றெனக் கருதினராகலின், இங்கு வைத்துக் கோத்தனர் எனலாம்.

## இதனுள்ளே


1. இனிமையான அமைதியான வாழ்க்கை
2. அன்பும் கருணையும் கொண்ட இறைநிலை
3. பேரின்பம் எனும் சர்க்கரை
4. மனத் தூய்மையே வழி
5. தீய வினைகள் கழிய
6. காயகற்பத்தால் காமத்தை கழிக்கலாம்
7. மிருகம், மனிதன், மாமனிதன
8. வினை நீங்கும் முறைமை
9. பழிச்செயல் பதிவு நீக்கம்
10. பிறப்பு இறப்பு நினையாது இருந்தேன்


# 1. இனிமையான அமைதியான வாழ்க்கை

வாழ்வுக்குத் தேவையான அறநெறிகள் என்ன என்பதையும் வேதாத்திரி மகரிஷி வகுத்து தந்துள்ளார்கள்.

1. வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் இவற்றை மதிப்பீட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்படாமல் அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் கணித்துக் கொள்ள வேண்டும்.
3. இயற்கையின் ஒழுங்கமைப்பும், அதன் ஆற்றலின் விளைவான காரண காரிய விளைவு விதியைப் பற்றி உணர்ந்து கொண்டு மதித்துப் போற்றி நடக்க வேண்டும்.
4. வாழவேண்டிய முறைகளையும், ஆற்றவேண்டிய செயல்களையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. இத்தகைய வாழ்வுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு உடல் வலிமையையும், திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
6. விடாமுயற்சியோடும், எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
7. அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளைத் தற்சோதனை, செயல்திருத்தம் என்ற இரண்டு வழிகளிலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், மனித வாழ்வில் உள்ள் சிக்கல்கள் அனைத்தையும் படிப்படியாகக் குறைந்து நிறைவும் அமைதியும் உடைய வாழ்க்கை வாழலாம் என்று வேதாத்திரியார் வழி காட்டுகின்றார்.

இந்த நோக்கம் நிறைவேண்டுமானால் முதலில் சிந்தனையாற்றலை மக்களிடம் தூண்டிவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இதுவே தினசரி வாழ்விலும் கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற  செயல்களை, சடங்கு முறைகளை ஒதுக்கிவிட்டு, வாழ்க்கைத் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தை சிந்தித்து உணரும் போது மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று வேதாத்திரியார் கூறுகின்றார்.

மாணிக்கவாசகர், வேதாத்திரி மகரிஷி போன்ற உலக சிந்த்னையாளர்கள் கூறும் இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், நமது வாழ்வு இனிமையாகவும், அமைதியாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"மைய லாய்இந்த மண்ணிடை
   வாழ்வு எனும் ஆழியுள் அகப்பட்டுத்
தைய லார் எனும் சுழித்தலைப்
   பட்டுநான் தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவருள்
   தந்துதன் பொன்னடி இணைகாட்டி
மெய்யனாய் வெளி காட்டி முன்
   நின்றதோர் அற்புதம் விளம்பேனே." (திருவாச.பா.569)

- மயக்கம் செய்யும் இந்த உலக வாழ்க்கை என்னும் கடலுள் மூழ்கி,
- மகளிர் இன்பம் எனப்படும் சுழியில் சிக்கி.
- நிலை தடுமாறி விடாதபடி,
- பொய்ப் பொருள்களை விட்டு நீங்குமாறு,
- தன்னுடைய பொன் போன்ற இணையான திருவடிகளைக் காட்டித் திருவருள் செய்து,
- உண்மையனாய் வெளிவந்து,
- என்முன் நின்ற அற்புதத்தை, எப்படி எடுத்து உரைப்பேன்?

## இருள் போக்கும் யோகம் வேண்டும் – வேதாத்திரியம்

"அருள்விளக்கம் இல்லாத குறையில் மக்கள்
   அனைத்து நலனும் இழந்து துன்பம் ஏற்று,
பொருள்காக்க, பூகாக்க, பொன்னைக் காக்கப்,
   போரிட்டு மடிகின்றார் அந்தோ! வாழ்வில்
மருள்போக்கி, மக்கள் ஒத்துதவி வாழ,
   மனத்தூய்மை வினைத்தூய்மை பெற்றுள் ளத்தில்
இருள்போக்கும் அகத்தவமும், அகத்தாய்வும் பின்
   இனிதளிக்கும் குண்டலின் யோகம் கற்பீர்." (ஞாக.பா.1484)

மனித வாழ்க்கை என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.

நல்லதையே செய்யச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை வந்துவிடும்.

மனிதனுடைய மனதிலே ஒரு நிறைவு வேண்டும். அந்த நிறைவிலிருந்து எழக்கூடியதுதான் இன்பமான வாழ்வு என்பதாகும். இத்தகைய இன்பமான வாழ்வை நோக்கி ஆனந்தமாக பயணிப்போம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

## 2. அன்பும் கருணையும் கொண்ட இறைநிலை

ஓர் இளம் தாய் தெரு வழியாகச் சென்று கொண்டிருக்கிறாள். அவளைப் பார்த்து ஒரு நாய் குரைக்கிறது. அவள் பயந்து அருகிலுள்ள வீட்டில் தஞ்சம் புகுகிறாள்.

மறுநாள் அதே தாய் தன் குழந்தையுடன் சென்று கொண்டிருக்கிறாள். திடீரென ஒரு சிங்கம் அவள் குழந்தையின் மீது பாய்கிறது. அவள் அப்போது என்ன செய்வாள்?

சிங்கத்தின் வாயில் தன்னை அர்ப்பணித்தாவது அவள் குழந்தையைக் காப்பாற்றுவாள் அல்லவா?

இவ்வுதாரணத்தைக் கூறி சுவாமி விவேகானந்தர் உண்மையான அன்பின் இலக்கணத்தை விளக்குகிறார்:

அன்பு பயம் அறியாதது. பயத்திற்குக் காரணம் சுயநலநோக்கம் தான். சுயநலத்திற்கும், சிறுமைத்தனத்திற்கும் அடிமைப்படும் அளவிற்கு பயம் அதிகரிக்கிறது.

தான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒருவன் நினைப்பானேயானால் பயம் அவனைப் பற்றிக் கொள்வது நிச்சயம்.

தான் அற்பன் என்ற எண்ணம் குறையக் குறைய பயமும் குறையும். துளியளவு பயம் இருந்தால்கூட அங்கே அன்பு இருக்க முடியாது.

அன்பும், பயமும் இணைந்து இருக்க முடியாதவை. கடவுளை நேசிப்பவன் அவரிடம் பயப்படக் கூடாது. பயத்தின் காரணமாக இறைவனை நேசிப்பவர்கள் மனிதர்களில் கடைப்பட்டவர்கள்.;

பக்குவப்படாதவர்கள். தண்டனை கிடைக்கும் என்ற பயத்தினால் இவர்கள் இறைவனை வழிபடுகிறார்கள்.

இப்படி தண்டனைக்கு பயந்து இறைவனை வழிபடுவது, வழிபாடு என்பதையே தரம் தாழ்த்துவதாகும்.

அத்தகைய வழிபாடு சற்றும் பக்குவப்படாத தாழ்ந்தநிலை வழிபாடாகும்.

மனத்தில் பயம் இருக்கும்வரை அங்கே அன்பு எப்படி வர முடியும்?

பயங்கள் அனைத்தையும் வெற்றி கொள்வது அல்லவா அன்பின் இயல்பு!...கடவுள் மீது நாம் கொள்கின்ற பயம் மதத்தின் துவக்கமே; அவர்மீது கொள்ளும் அன்பே மதத்தின் முடிவு.

இங்கு பயம் அனைத்தும் ஓடிவிட்டது. அன்பின் மூலம் வழிபாடு செய்வதே உண்மையான ஆன்மிக வழிபாடு.

கடவுள் இரக்கமுள்ளவரா என்ற கேள்வியே இங்கு எழுவதில்லை. அவர் கடவுள், அவர் எனது அன்பர். அவர் எல்லாம் வல்லவரான சர்வ சக்தி வாய்ந்தவரா, ஓர் எல்லைக்கு உட்பட்டவரா, உட்படாதவரா என்ற கேள்விகளுக்கும் இங்கே இடமில்லை.

அவர் நல்லது செய்தால் நல்லது. தீமை செய்தாலும் அதனால் என்ன? எல்லையற்ற அந்த அன்பைத் தவிர மற்ற எல்லா குணங்களும் மறைகின்றன...கடவுளே அன்பு,

அன்பே கடவுள்...தெய்வீக அன்பாக மாறிவிடுவதுதான் உண்மையான வழிபாடு..அன்பின் உருவமாக எண்ணி அவரை வழிபடுங்கள்.

எல்லையற்ற அன்பு என்பதே அவரது பெயர். இது ஒன்றே அவரைப் பற்றிய விளக்கம்...தகப்பன் அல்லது தாய்க்குக் குழந்தையின்மீது உள்ள பாசம், கணவனுக்கு மனைவிமீதும், மனைவிக்குக் கணவன்மீதும் உள்ள காதல், நண்பர்களுக்கிடையே உள்ள நட்பு இவையனைத்தும் ஒன்றாகத் திரண்ட பேரன்பைக் கடவுள்மீது செலுத்தவேண்டும்...

கடவுள்மீது நாம் அன்பு செலுத்த வேண்டிய முறை இதுவே: எனக்கு செல்வம் வேண்டாம், உடைமை வேண்டாம், கல்வி வேண்டாம், முக்தியும் வேண்டாம்...

ஆனால் ஒன்று மட்டும் அருள்வாய் நான் உன்னை நேசிக்க வேண்டும். அதுவும் அன்பிற்காக அன்பு செலுத்த அருள்வாய்...இறைமகிமை ஓங்கட்டும்! அன்பின் வடிவான அவன் புகழ் ஓங்கட்டும்!

“ஏய்ந்த மாமலர் இட்டுமுட்
    டாததோர் இயல்  பொடும் வணங்காதே
சாந்தம் ஆர்முலைத் தையல்நல்
    லாரொடும் தலைதடு மாறாகிப்
போந்து யான்துயர் புகாவணம்
    அருள்செய்து பொற்கழ இணைகாட்டி
வேந்த னாய் வெளி யேஎன்முன்
   நின்றதோர் அற்புதம் விளம்பேனே.” (திருவாச.பா.570)

- பொருத்தமான மலர்களைக் கொண்டு,
- இடையீடு இன்றி,
- நல்லியல்புடன் இறைவனை வணங்காது,
- சந்தனம் பூசிய முலையினை உடைய, அழகிய மகளிர் இன்பத்தால், நிலைதடுமாறி துன்பம் அடையாத வகையில்,
- என்மீது இரக்கம் காட்டி. தனது பொன் போன்ற இரண்டு திருவடிகளைக் காட்டி

- எமக்கு அரசனாய் எம்முன் வந்து நின்ற அற்புதத்தை, எப்படி எடுத்து உரைப்பேன்?

அன்பும் கருணையும் உடையவன் இறைவன் வேதாத்திரியம்

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ, மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது.

அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

.

ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அணைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு.

முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சட் கருதான் குஞ்சு ஆக உருவாக இருக்கிறது. அந்த மஞ்சட் கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக்கரு தேவையான எல்லாப் பொருட்களையும் அளித்து நலமளிக்கின்றது. இது போன்றது கருணை.

.

ஒரு மாமரத்தில் பிஞ்சுவிடுகிறது. அதனைச் சிறு காம்பின் மூலம் விழுந்து விடாமல் மரமானது பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அன்பு.

அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான ரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. அது தான் கருணை.

.

உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக்கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள் இது அன்பு.

அதே காலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவைகளை அது வளர்ச்சி பெரும் வரையில் ஊட்டிக் கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

“ஆறுகுணச்சீரமைப்பு பெற்று மனத்தூய்மை
பெறும் போது நம்மிடம் உள்ள அன்பும்
கருணையும் பீறிட்டு மேலோங்குகின்றன.”

.

“அன்பையும் கருணையையும் கொண்ட மனிதன்
அதை உணர்ந்து தன் வாழ்விலும் செயலிலும்
பின்பற்றி வாழ்வதே இறைவழிபாடாகும்.”

.

“அன்பிரக்கம் தொண்டு தவம் ஈகை இன்சொல்
ஆன்மிக நெறியாகும் போற்றிக்காக்க
துன்பங்கள் குறைந்துவரும்; மேலும் தெய்வத்
துணைகிட்டும்; வாழ்வில் புகழ் நிறைவு ஓங்கும்;
நன்முறையில் தனிமனிதன் வாழக்கற்றால்
நாட்டினிலும் வீட்டினிலும் அமைதி ஓங்கும்;
இன்பமயமே எங்கும், இந்த உண்மை
எளிதன்றோ கற்பதற்கும் வாழ்வதற்கும்”.
(வேதாத்திரி மகரிஷி)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

## 3.பேரின்பம் எனும் சர்க்கரை

உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பாக்கியம் எல்லாம் முன்னே நீங்கள் இதுவரை செய்த வினையின் விளைவு, செயலின் விளைவு என்று தெரிந்து கொண்டு அதனுடைய பயனாக இனிமேல் நல்ல காரியங்களையே செய்வோம் என்று எண்ணிக்கொண்டு நலமுள்ள

காரியத்தைச் செய்வேன், நலமுள்ள காரியத்தை நினைப்பேன், அதற்கு என்னுடைய ஆற்றல் முழுவதும், உடல் சக்தி முழுவதும் செயல்படட்டும் என்று எண்ணிணீர்களானால் அதுதான் Positive thinking, Positive side,

□□□□□□□□ என்றால், தமிழில் “ஆக்கத் துறை” என்று பெயர். “Negative” என்றால் “முறித்தல்” “எதிர்த்தல்” என்று பொருள். எதிரிப்பின்றி “ஆக்கம்” என்றால் மேலும் மேலும் நலன் அளிக்கக் கூடியதுதான் அந்த ஆக்கம்.

அந்த முறையிலே நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் நலம் விளையும். ஆகவே, எல்லோரும் எண்ணத்தை நல்லதாக்கிக் கொண்டு வர வேண்டும்.

“பிறருக்கு உதவி செய்வேன், ஒவ்வொருவருக்கும் என்னால் இயன்றதைச் செய்து கொண்டே இருப்பேன்” என்று சொல்லும் போது அது ஊற்று மாதிரியாகவே வற்றாது சுரக்கும்.

அவ்வாறு பிறர்க்கு உதவி செய்யும் போது எங்கிருந்து செய்யப் போகிறீர்கள்? இருப்பிலிருந்து தான் கொடுக்கிறோம், இருப்பதைத் தான் செய்கிறோம். அங்கே இல்லையானால் செய்ய முடியாதல்லவா?

ஆகையினால் செய்யச் செய்ய வந்து கொண்டேதான் இருக்கும்; நல்ல முறையிலே அது வளர்ந்து கொண்டே தான் இருக்கும். எப்பொழுதும் அந்த மெய்யுணர்வு வந்து விட்டது என்றால், மெய்யுணர்வினைப் பயன்படுத்துவோம் என்றால், சேவையிலே நிறைவு வரும்; வாழ்விலும் ஒளி பெருகும்.

மனிதன் நல்ல எண்ணத்தோடு, முயற்சியோடு, ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் பத்து அடி எடுத்து வைப்பான் என்று சொல்லப் பட்டுள்ளது.

இதன் பொருள் என்ன என்றால் நீங்கள் உங்களுடைய மனம் நாடினால் போதும்.

[illegible], ஏனென்றால் அங்கு தான் இருப்பு இருக்கிறது. நான் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கமாட்டேன் என்ற நிலைக்கு வந்தோமானால் என்ன ஆகும்?

நல்ல எண்ணம், மனத்தூய்மை, கொண்ட ஒருவர் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு எல்லாம் வல்ல இறைவன் என்னைக் கவனித்துக் கொள்வான் என்றிருந்தால் அவரது தேவையை நிறைவேற்ற உதவிகள் எல்லாத் திசையிலிருந்தும் வந்து சேரும்.(–அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

“நடித்து மண்ணிடைப் பொய்யினைப்
  பலசெய்து நான் எனது எனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன்
  வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை
  தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்து அடித்து அக் காரம் முன்
  தீற்றிய அற்புதம் அறியேனே.” (திருவாச.பா.571)

- இந்த உலக வாழ்க்கை என்னும் நாடகத்தில் நடித்து,
- பல பொய்யான செயல்களைச் செய்து.
- நான் எனது என்னும் செருக்கினால் விளைந்த வஞ்சனை செய்யும், பாம்பு கடித்த இடத்தில், முன் வினைப்பயன் என்னும் விடம் தங்கவும்,
- மிகவும் புலம்பித் திரிந்து கொணடிருந்த என்னைப் பிடித்து நிறுத்தி, என் எதிரில் எழுந்தருள,
- வேதங்கள் தேடியும் அறிய முடியாதவனாக விளங்கும் இறைவன்,
- அடிமேல்அடி அடித்து, பேரின்பம் என்னும் சர்க்கரையை ஊட்டுவித்தான்.
- அந்த அற்புதத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## பேரின்ப ஊற்று – வேதாத்திரியம்

“இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா! எங்கும்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!
அன்பும் கருணையுமாய், அனைத்து உயிர்களுடும்
இன்ப ஊற்றாய், அறிவாய், இயங்கும் பராபரமே!”

இன்ப ஊற்றில் திளைத்து நாள்தோறும் இன்பமாக வாழ்வோம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

# 4மனத்தூய்மையே வழி

மனத்தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது — இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும்.

ஏழையிடமும் பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான்.

விக்கிரகத்தில் மட்டுமே சிவபெருமானைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில் உள்ளது.

ஒரே ஓர் ஏழைக்காயினும், அவனது ஜாதி, இனம், மதம் போன்ற எதையும் பாராமல், அவனிடம் சிவபெருமானைக் கண்டு அவனுக்கு உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் சிவபெருமான் மிகவும் திருப்தி கொள்கிறார்; கோயிலில் மட்டுமே தம்மைக் காண்பவனைவிட, இவனிடம் அதிக மகிழ்ச்சி கொள்கிறார்.

ஒரு பணக்காரனுக்குத் தோட்டமொன்று இருந்தது. அதில் இரண்டு தோட்டக்காரர்கள் இருந்தார்கள்.

ஒருவன் சோம்பேறி, வேலையே செய்ய மாட்டான். ஆனால் எஜமான் தோட்டத்துக்கு வந்தால் போதும். உடனே எழுந்து போய் கூப்பிய கைகளுடன் அவரிடம், “ஓ, என் எஜமா ன னின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது” என்று புகழ்பாடி அவர் முன்னால் பல்லை இளித்துக் கொண்டு நிற்பான்.

மற்றவன் அதிகம் பேசுவதே இல்லை, ஆனால் கடினமாக உழைப்பான். பலவகையான பழங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்து, நெடுந்தொலைவில் வசிக்கின்ற அந்த எஜமானின் ன் வீட்டிற்குச் சுமந்து கொண்டு செல்வான்.

இந்த இரண்டு தோட்டக்காரர்களுள் யாரை எஜமான் அதிகம் விரும்புவார்?

சிவபெருமான்தான் அந்த எஜமான். இந்த உலகம் அவரது தோட்டம். இங்கே இரண்டு வகையான தோட்டக்காரர்கள் இருக்கிறார்கள்.

ஒருவகையினர் சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள். அவர்கள் எதுவும் செய்வதில்லை; சிவபெருமானின் அழகான கண்களையும் மூக்கையும் மற்ற குணநலன்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஏழைகளான, பலவீனர்களான எல்லா மனிதர்கள், விலங்குகள் மற்றும் அவருடைய படைப்பு அனைத்தையும் மிகுந்த கவனத்தோடு பராமரிப்பவர்கள் மற்றொரு வகையினர்.

இவர்களுள் யார் சிவபெருமானின் அன்பிற்கு உரியவர்கள்? நிச்சயமாக அவரது பிள்ளைகளுக்குச் சேவை செய்பவர்களே. தந்தைக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள் முதலில் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய வேண்டும்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவர்கள், அவரது பிள்ளைகளாகிய இந்த உலக உயிர்கள் அனைத்திற்கும் முதலில் சேவை செய்ய வேண்டும்.

கடவுளின் தொண்டர்களுக்குச் சேவை செய்பவர்களே அவரது மிகச் சிறந்த தொண்டர்கள் என்று சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை மனத்தில் கொள்ளுங்கள்.

மீண்டும் சொல்கிறேன்: மனத்தூய்மையுடன் இருங்கள், உங்களை நாடி வரும் ஏழைகளுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். இது நற்கர்மம். இதன் பலனாக உங்கள் இதயம் தூய்மை பெறும்.

எல்லோரிலும் உறைகின்ற சிவபெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவார். அவர் எல்லோரது இதயத்திலும் எப்போதும் இருக்கிறார். அழுக்கும் தூசியும் படிந்த கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்க முடியாது. அறியாமையும் தீய குணங்களுமே நம் இதயக் கண்ணாடியில் படிந்துள்ள தூசியும் அழுக்கும்.

நம் நன்மையை மட்டுமே நினைக்கின்ற சுயநலம், பாவங்கள் அனைத்திலும் முதற்பாவமாகும்.

‘நானே முதலில் உண்பேன். மற்றவர்களைவிட எனக்கு அதிகமான பணம் வேண்டும், எல்லாம் எனக்கே வேண்டும்’, ‘மற்றவர்களுக்கு முன்னால் நான் சொர்க்கத்தை அடையவேண்டும், எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெறவேண்டும்’ என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி.

சுயநலமற்றவனோ, ‘நான் கடைசியில் இருக்கிறேன். சொர்க்கம் செல்வதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் நரகத்துக்குச் செல்வதால் என் சகோதரர்களுக்கு உதவ முடியுமானால் அதற்கும் தயாராக இருக்கிறேன்’ என்கிறான்.

இத்தகைய சுயநலமற்ற தன்மையே மதத்திற்கான உரைகல். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி, அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.

அவன் படித்தவனாக இருந்தாலும் படிக்காதவனாக இருந்தாலும், அவன் அறிந்தாலும் அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும்விட சிவபெருமானுக்கு அருகில் இருக்கிறான்.

சுயநலம் கொண்டவன் எல்லா கோயில்களையும் வழிபட்டிருந்தாலும், புண்ணியத் தலங்கள் அனைத்தையும் பார்த்திருந்தாலும், சிறுத்தையைப்போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக் கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கிறான்.(விவேகானந்தர் கதைகள்)

“பொருந்தும் இப்பிறப்பு இறப்பு இவை
　நினையாது பொய்களே புகன்றுபோய்க்
கருங்குழல்லினார் கண்களால் ஏறுண்டு
　கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை
　சிலம்பிடத் திருவொடும் அகலாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண்டு
　அருளிய அற்புதம் அறியேனே.” (திருவாச.பா.572)

- மாறி மாறி வந்து பொருந்துகின்ற பிறப்பு இறப்புகளைப் பற்றிக் கவலைப்படாது, பொய்யானவற்றையே சொல்லித் திரிந்து கொண்டிருந்தேன்.
- கருமையான கூந்தலை உடைய, பெண்களின் கண்களால் தாக்குண்டு. கலக்கம் அடைந்து முடங்கிக் கிடந்தேன்.
- அப்படிப்பட்ட என்னை. இறைவன் தன்னுடைய செப்பமான, சிவந்த திருவடிகளில் சிலம்பு ஒலி செய்யுமாறு, அருட்சத்தியோடு எழுந்தருளி வந்து. என்னுடன் பொருந்தி,
- என்னை விட்டு நீங்காது, பெறுதற்கு அரிய துணையாய் இருந்து ஆட்கொண்டான்.
- அந்த அற்புதத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## மனத்துய்மை அடைந்தால் இறை இன்பம் வேதாத்திரியம்

“வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை

வேண்டுவது இன்றியமை யாததாகும்.
வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,
விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
வினைத்தூய்மை வித்தான மனத்தின்தூய்மை
விண்ணுணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய.
வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று
உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1286)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

## 5. தீய வினைகள் கழிய

தன் வினைதான் தன்னைச் சுடும். நாம் செய்யும் ஒவ்வொரு வினைக்கும் உறுதியாக எதிர்விளைவு ஒன்று உள்ளது. நல்லது செயின் நல்ல விளைவுகள் ஏற்படும்.

நமச்சிவாய வாழ்க!
நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதான் தாள் வாழ்க!

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹா தேவாய தீமஹி!
தன்னோ ருத்ர ப்ரச்சோதயாது!

ஓம் த்ரயம்பகாய வித்மஹே ம்ருத்யுஞ்சாய தீமஹி!
தன்னோ பரமசிவ ப்ரச்சோதயாத்

ஒருவர் செய்யும் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற தீய விளைவுகள் அவர்கள் அனுபவிக்க நேரிடும்.

அத்தகைய பாவ விளைவுகளை களைய, ஒருவர் தன்னுடைய ஆணவத்தை துறந்து, சிவனை மனதார வணங்கி, தான்செய்த தீய

வினைகளை அவனடியில் சமர்ப்பித்து, மேலே கூறப்பட்டுள்ள சிவன் மந்திரங்களை சொல்லி இறைவனை வணங்க வேண்டும்.

பக்தி மார்க்கத்தில் தீய வினைகள் போக்க மந்திரங்களை உச்சரிக்க சொல்வார்கள்.

என்னுடைய தீயவினைகளை வெந்து அழியுமாறு செய்து, தன்னுடைய மென்மையானமலர் போன்ற திருவடிகளைக் காட்டி, அருள் செய்வாயாக என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

"மாடும் சுற்றமும் மற்றுள
போகமும் மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால்
ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடுதந்து என்தன் வெம்தொழில்
வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்து எனது அகம்புகுந்து
ஆண்டதோர் அற்புதம் அறியேனே." (திருவாச.பா.573)

- செல்வம் , உறவினர். மகளிர், மற்றுமுள்ள இன்ப நுகர்வுகள் என்று இவற்றோடு தொடர்பு கொண்டு, அதனால் வரும் இன்பங்களால் தாக்குண்டு, அதனைப் புகழ்ந்து பேசித் திரிந்து கொண்டிருந்தேன்.
- அப்படிப்பட்ட என்னுடைய தீயவினைகளை வெந்து அழியுமாறு செய்து, தன்னுடைய மென்மையானமலர் போன்ற திருவடிகளைக் காட்டி,
- என் உள்ளத்தில் புகுந்து, வீட்டின்பம் தந்து, அந்த இன்பத்தில் ஆடித் திளைக்குமாறு, ஆட்கொண்டு அருள் செய்தான்.
- அந்த அற்புதத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## உள்ளதை உணர்வதே உண்மை உணர்வு – வேதாத்திரியம்

"சாயமிட்ட கோலிகளைத் தனியிருட்டில் பார்க்க,
சமமாக அத்தனையும் தரும்கருப்பு நிறமே
தூயவெளி இறைநிலையின் தோற்றமே ஆன்மாக்கள்

சுத்தமானதே எதுவும். சுயநிலையில் உணர்வோம்.
தீயவழியில் நடந்த செயல்கள் ஆன்மாமீது
தீட்டப்பட்ட வினைப்பதிவே சிறுமை பலவாகும்.
நேயமுள்ள அறநெறியும் நேர்மை மெய்யுணர்வும்,
நிச்சயமாய்ப் பதிவுகளை நிர்மலமாய் செய்யும்." (ஞாக.பா.1291)

பல வண்ணங்களில் சாயமிட்ட கோலிக் குண்டுகளை, தனியாக இருட்டில் பார்க்கும் போது அனைத்து கோலிக் குண்டுகளும் கருப்பு நிறமாகவே காட்சி அளிக்கும்.

தூய வெளியாகிய இறைநிலையின் தன்மாற்றத் தோற்றங்களே அனைத்து ஆன்மாக்களும், சுய நிலையில் அனைத்தும் தூய்மையானது தான் என்பதை உணர்வோம்.

பிறவிகள் தோறும் உண்மைக்கு மாறாக தீய வழிகளில் நடைபெற்ற செயல்கள் அனைத்தும் வினைப்பதிவுகளாக ஆன்மாவின் களங்கங்களாக பல வகையில் சிறுமைப்பட்டு உள்ளது.

ஆன்ம நேத்தை வெளிப்படுத்தம் அறநெறி வாழ்வும், அதற்கு உதவுகின்ற மெய் உணர்வின் நேர்மையும் நிச்சயமாக ஆன்மாவின் களங்கமான பதிவுகளை அகற்றி தெளிவினை மலர்த்தும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

## 6. காயகற்பத்தால் காமத்தை கழிக்கலாம்

ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் மிகுந்த பதட்டத்துடன் இளைஞன் ஒருவன் வந்து...

ஐயா!காமம் எப்படி விலகும்? மனத்தை அடக்க முயற்சி செய்தாலும் சில நேரங்களில் கீழான ஆசைகளும் வெறுக்கத்தக்க உணர்ச்சிகளும்

என் மனத்தை அலைக் கழிக்கின்றன. அதனால் நான் அமைதியை இழந்து தவிக்கிறேன்' என்று சொன்னான்.

குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்....

அப்பா,இறைக்காட்சி கிட்டாதவரை காமம் அடியோடு விலகுவதில்லை .அதன் பிறகும் உடல் இருக்கும் வரை அதன் சுவடு சிறிது இருக்கவே செய்யும்; அதனால் எவ்விதத் தொந்தரவும் இருக்காது.

என்னிடமிருந்து முழுமையாகக் காமவாசனை போய்விட்டதென்றா நினைக்கிறாய்? காமத்தை வென்று விட்டதாக நான் ஒரு சமயம் நினைத்தேன்.

அதன் பிறகு ஒருநாள் பஞ்சவடியில் அமர்ந்திருந்தபோது என்னை மீறிக் காம உணர்ச்சி பீறிட்டு எழுந்தது. என்னால் அடக்கவே முடியாது போல் தோன்றிற்று. நான் ஆடிப் போய்விட்டேன்.

உடனே தரையில் விழுந்து,  புழுதியில் முகத்தைத் தேய்த்துக் கொண்டு அழுத வண்ணம் அன்னை காளியிடம்,'அம்மா,நான் பெரிய தவறு செய்துவிட்டேன். காமத்தை வென்றதாக இனி எண்ணவே மாட்டேன்,' என்று முறையிட்டேன்.

அதன் பின்னரே அந்த உணர்ச்சி என்னை விட்டு நீங்கியது.நீ யோ வாலிபன். அதனால்தான் உன்னால் அந்த வேகத்தை அடக்க இயலவில்லை.

பெரு வெள்ளம் புரண்டு வரும்போது அது கரையைப் பற்றி கவலைப்படவாச் செய்யும்!

கரையோ, எதுவோ வழியிலுள்ள அனைத்தையும் உடைத்துக் கொண்டு அது முன்னேறுகிறது; வயல்களில் புகுந்து பெரும் உயரத்திற்குத் தேங்குகிறது.

ஆனால், கலியுகத்தில் மனத்தினால் செய்கின்ற பாவம், பாவமே இல்லையென்று கூறப்பட்டுள்ளது

ஏதோ ஒருமுறை கெட்ட எண்ணம் எழுந்து விட்டதற்காக ஏன் இப்படிப் படபடக்கிறாய்?

உடலின் இயற்கைப் படி இந்த உணர்ச்சிகள் சில சமயம் வந்து போகத்தான் செய்யும்.

இதையும் மலம் கழிப்பது போன்ற சாதாரண உணர்ச்சியாக எண்ணிக் கொள்ள வேண்டும். மலம் கழிக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக யாராவது கன்னத்தில் கைவைத்துக் கொண்டு கவலைப்படுகிறார்களா?

அதேபோன்று இத்தகைய உணர்ச்சிகளையும் இயல்பானவையாக, அற்பமானவையாகக் கருது. அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

இறைவனிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய். ஹரி நாமத்தை ஜெபி. அவரது பெருமையில் ஈடுபடு.கெட்ட எண்ணங்கள் வரட்டும்,போகட்டும். அவற்றைக் கண்டு கொள்ளாதே. தாமாகவே அவை கட்டுக்குள் அடங்கி விடும்.' (காமத்தை வெல்வது பற்றி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்)

“வணங்கும் இப்பிறப்பு இறப்பு இவை
நினையாது மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாய் இதழ்ப் பெருவெள்ளத்து
அழுந்திநான் பித்தனாய்த் திரிவேனைக்
குணங்களும் குறி களும் இலாக் குணக்
கடல் கோமளத் தொடும் கூடி
அணைந்து வந்து எனை ஆண்டுகொண்டு
அருளிய அற்புதம் அறியேனே.” (திருவாச.பா.574)

- இறைவனை வணங்குவதற்காக கிடைத்த பிறப்பு என்று எண்ணாத காரணத்தால், தொடர்ந்து பிறப்பும் இறப்பும் நிகழ்கிறது.
- இது குறித்து கவலைப்படாது, பெண்களோடு பொருந்தி, அவர்களது உதடுகள் வழி பெருகும் எச்சிலில் மூழ்க, நான் பித்தனாய் அலைந்தேன்.
- முக்குணமும் ஓர் அடையாளமும் இல்லாது, குணக்கடலாக (அருட் கடலாக) திருவருட் சத்தியோடு (அம்மையோடு) எழுந்தருளி வந்து, என்னைத் தழுவி ஆட்கொண்டான்.
- அந்த அற்புத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

### காயகற்பத்தால் காமம் மிகைகுறை சமனாம் – வேதாத்திரியம்

“காயகற்ப பயிற்சியினால் கண்கள் நன்றாம்.
 காமம் மிகைகுறை சமனாம். குடும்ப வாழ்வில்
காயகற்பம் இனிமை அன்பு விருப்பம் ஊக்கும்.
 கடமையுணர்வும் தெய்வ நினைவும்ஓங்கும்.” (ஞாக.பா.1507)

ஊர்தோறும் நடைபெற்று வரும் மனவளக்கலை மன்றங்களில் காயகல்ப பயிற்சி சொல்லித் தருகிறார்கள்.

நாள்தோறும் காயகல்பம் பயிற்சி செய்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே




# 7. மிருகம், மனிதன், மாமனிதன்

புலன்கள் மூலமாகப் பொருட்களைப் பார்ப்பதும், அப்படி நாம் பார்க்கும் போது நமது ஜீவகாந்த சக்தி செலவு ஆவதால் இன்பமோ, துன்பமோ, அமைதியோ, பேரின்பமோ வருவதும், புலன்கள் மூலமாக வரக்கூடிய வாழ்க்கை. உலகியல் வாழ்க்கை.

அதற்கு மேலாக உண்மையை உணர்ந்து, இயற்கையை உணர்ந்து, அதற்குத் தக்கவாறு அருள்வாழ்வு வாழ வழி வகுத்துக் கொண்டு வாழக்கூடிய ஒரு பேராற்றலும் மனிதனிடத்தில் இருக்கிறது.

ஆனால், மற்ற ஜீவராசிகளிடமும் இந்த அறிவு இல்லையா என்று பார்த்தால் இருக்கிறது. ஆனால் அந்த அறிவைச் செயல்படுத்தக் கூடிய வாய்ப்பே அவற்றுக்கு இல்லை.

பசி எடுத்தால் சாப்பிடவேண்டும். ஆனால், சாப்பாட்டிற்கு உணவு உற்பத்தி செய்ய எந்த ஜீவனாலாவது முடியுமா?

உலகத்திலே, மனிதன் ஒருவனுக்குத் தான் தனக்கு வேண்டிய உணவைத் தானே உற்பத்தி செய்து சாப்பிடக்கூடிய திறமை உள்ளது. மற்ற ஜீவன்களுக்கு இல்லை. அவை என்ன செய்கின்றன?

'மற்றொரு ஜீவன் தன் வாய்க்குள் போகக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்கும் மேலாகத் தன்னால் கொன்று அதைச் சாப்பிடக்கூடிய, தன் வலிவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்' இப்படித்தான் அதற்கு உரிய உணவை எல்லா ஜீவனும் தேடிக் கொள்கின்றன.

உலகத்திலுள்ள எந்த ஜீவன் ஆனாலும் சரி, ஓரறிவான மரம், செடி, கொடி தவிர இரண்டாவது அறிவாகத் தோன்றி புழுவிலிருந்து மற்ற பூச்சிகள், பறவைகள், கால்நடைகள் எல்லாமே ஒரு உயிரைக் கொன்று வாழக்கூடியவை தான்.

ஆனால், அதனாலெல்லாம் அது கொலை செய்கிறது என்று உயிரினங்கள் பேரில் குற்றம் சுமத்த முடியாது. ஏனெனில், அவற்றுக்கு உணவு உற்பத்தி செய்யத் தெரியாது.

ஆனால், அதையே மனிதன் செய்யும்போது குற்றமாகக் கொள்கிறோம். ஏன் என்றால், துன்பத்தைத் தவிர்த்து இன்பமாக வாழ வேண்டும் என்று நம்மால் நினைக்க முடியும்.

இந்த உணர்வைச் செயல்பாட்டில் கொண்டு வந்தால் அதற்குத் தகுந்தவாறு திட்டமிட்டு வாழக்கூடிய அறிவு மனிதனிடம் இருக்கிறது.

இப்போது மனிதனுடைய சிறப்பை உணர்ந்து கொள்கிறோம்.

இந்தச் சிறப்பை உணர்ந்து யார்க்கும் எவருக்கும் துன்பம் உண்டாகாமல் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதோடு, இதெல்லாம் தெரியாமல் துன்பத்தில் உழலும் மற்ற மனிதர்களும் அறிவு மேம்பாடு பெற அருள் தொண்டாற்றுவதற்கு அந்தச் சிறந்த மனிதன் முன்வரும்போது மாமனிதனாகிறான்.

"இப்பிறப்பினில் இணைமலர் கொய்துநான்
  இயல்பொடு அஞ்செழுத்து ஓதித்
தப்பிலாது பொற் கழல்களுக்கு இடாது
  நான் தடமுலை யார் தங்கள்
மைப்பு உலாம் கண்ணால் ஏறுண்டு
  கிடப்பேனை மலரடி இணைகாட்டி
அப்பன் என்னைவந்து ஆண்டு கொண்டு
  அருளிய அற்புதம் அறியேனே." (திருவாச.பா.575)

- இந்தப் பிறப்பில்  இறைவனுக்கு விருப்பமான மலர்களைப் பறித்து, தவறாது அவரது பொன் போன்ற திருவடிகளுக்குச் சாத்தாதும்,
- திருவைத்தெழுத்தை முறைப்படி ஓதாதும்,
- பெரிய முளையினை உடைய பெண்களின் மைபூசிய கண்ணின் பார்வையால், தாக்குண்டும் கிடந்தேன்.
- அப்படிப்பட்ட என்னை. என் தந்தை, தனது இணையான மலர் போன்ற திருவடிகளைக் காட்டி, ஆட்கொண்டு அருள் செய்தான்.
- அந்த அற்புதத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## நல்வினை தீவினை – வேதாத்திரியம்

"புலன்கவர்ச்சி மயக்கத்தால் உணர்ச்சி மீறி,
புறத்தாற்றும் செயல்களெல்லாம் வீழ்ச்சி காட்டும்.
புலன்கள்தமை அறிவாலே ஆளக் கற்கும்
பொறுப்படைய வாழ்க்கைநெறி ஆக்கம் நல்கும்.
புலன்மயக்கம் தன்முனைப்புப் பழிச் செயல்கள்,
புகழ்போக்கும் பொருட்கள் உயிர்ப் பற்றுயர்த்தும்.
புலன் அடக்கம் இம்மூன்று களங்கம் போக்கி,
புவிவாழ்வில் நிறைவுதரும், பிறப்பறுக்கும்" (ஞாக.பா.1507)

புலன் அடக்கம் பெற்று, களங்கள் போக்கும் வழியில் பயணித்து வாழ்வோமாக. திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே

# 8. வினை நீங்கும் முறைமை

"ஏன்றவினை உடலோடு ஏகும்; இடையேறும் வினை
தோன்றில் அருளே சுடும்." (திருவருட்பயன்)

இப்பிறப்பில் நுகர்தற்கு என்று முகந்து கொண்டு வந்த பிராரத்த வினைகள் சீவன் முத்தர்க்கு இவ்வுடம்பு இருக்கும் வரையில் இருந்து, அவரால் பற்றின்றி நுகரப்பட்டு இவ்வுடம்பு நீங்குங் காலத்தில் முடிந்தொழியும்.

அவர் பிராரத்த வினையை நுகரும்போது புது வினையாகிய ஆகாமியம் தோன்றுமாயின் அதனைத் திருவருளே எரித்துவிடும்.

வினை தோன்றி வளரும் முறை:

இப்பிறப்பில் நாம் நல்லனவும், தீயனவும் ஆகிய செயல்களைச் செய்கின்றோம்.

அச்செயல்களைச் சில பயன்களை விரும்பிச் செய்கின்றோம். நன்மைகளை வருவித்தற்காகச் சில செயல்களை செய்கின்றோம். தீமைகளைப் போக்கிக் கொள்வதற்காகச் சில செயல்களைச் செய்கின்றோம். இப்படிச் செய்யும் செயல்கள் ஆகாமியம் எனப்படும்.

அவை உடனே அழிந்து விடுவதாக நாம் நினைக்கிறோம். அப்படியன்று. அவை நிகழும் பொழுது கண்ணுக்குப் புலப்படுகின்ற நிலையில் உள்ளன. பின், புலப்படாத நிலையை அடைந்து நிற்கின்றன.

எனவே அவை அடியோடு இல்லாமல் அழிந்து போய் விடவில்லை. புலப்படுகின்ற தூல நிலையிலிருந்து நீங்கிப் புலப்படாத சூக்கும நிலையில் உள்ளன என்பதே உண்மையாகும்.

புலப்படாத அந்நிலையில் அவை சஞ்சிதம் எனப் பெயர் பெறுகின்றன. பலப்பல பிறப்புக்களில் செய்யப்பட்டுக் கிடக்கும்

வினைகளின் தொகுப்பே சஞ்சிதம் ஆகும்.

சஞ்சிதம் முழுதும் ஒரே பிறப்பில் பயனாய் வருதல் இல்லை. அத்தொகுப்பிலிருந்து ஒரு சிறு பகுதியை முகந்து கொண்டு ஒரு பிறப்புத் தோன்றும். அவ்வாறு பழவினையினின்றும் முகந்து கொண்ட வினைகள் பிராரத்தம் என்ற பெயரைப் பெறும்.

அவை இன்பத் துன்பமாகிய பயனை விளைவிக்கும். இவ்வாறு வினைகள் ஆகாமியமாய்த் தோன்றி, சஞ்சிதமாய்க் கிடந்து, பிராரத்தமாய் வந்து பயன் கொடுக்கும்.

பிராரத்தம் இப்பிறப்பில் நன்மையாகவோ, தீமையாகவோ வந்து பொருந்தும் பொழுது, நாம் முன்பு செய்த செயலே இவ்வாறு பிராரத்தமாய் விளைகிறது என்று யாரும் எண்ணுவதில்லை. அதனை இறைவன் ஊட்டுகிறான் என்றும் எண்ணுவதில்லை.

அந்த நேரத்தில் அதற்குக் காரணமாய் நிற்பவர் யாரோ அவர் மேல் விருப்போ வெறுப்போ கொள்ளுதல் மாந்தர் இயல்பு. அவ்விருப்பு வெறுப்புக்கள் சொல்லாய் வெளிப்படும். செயலாய் நிகழும். அவையே ஆகாமிய வினையாய்ப் பின் சஞ்சிதமாகும்.

இவ்வாறு வினைகள் ஏறிக் கொண்டே போகும். பிராரத்தத்தை விருப்பு வெறுப்போடு அனுபவிக்கின்ற நிலையில் ஆகாமியம் தோன்றும் என அறிந்தோம்.

இங்கே ஓர் ஐயம் எழலாம். ஞானிகளாகிய சீவன் முத்தர்க்கு உடம்பு உள்ள வரையில் பிராரத்த வினை இருக்கும்.

அஃது இருக்கின்ற வரையில் அதனது தாக்கமும் இருக்கும். அங்ஙனம் பிராரத்த வினை தாக்கும்பொழுது அதனை அனுபவிக்கின்ற நிலையில் ஆகாமியம் தோன்றவே செய்யும்.

அவ்வாறாயின் ஞானிகள் வினைத் தொடர்பிலிருந்து எங்ஙனம் நீங்க முடியும் என்பதே அவ்ஐயம்.

அவர்கள் தமக்கு வரும் பிராரத்தத்தை எப்படி அனுபவிப்பார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் இதற்கு விடை கிடைத்து விடும்.

பிராரத்த வினையின் தாக்கம்

இங்கே ஒன்றைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பிராரத்தம் நேரே உயிரைத் தாக்குவதில்லை. அஃது உடலில் நோய் முதலியவற்றைத் தோற்றுவித்து உடல் மூலமாகவே உயிரைத் தாக்கும்.

ஒருவர் ஒழுக்கமாக வாழ்க்கை நடத்துகிறார். ஒழுங்கான உணவுப் பழக்கம் வைத்திருக்கிறார். எந்தத் தீய பழக்கமும் அவரிடம் இல்லை. ஆயினும் அவருடலில் எப்படியோ நோய் வந்து பற்றுகிறது; அவரை வாட்டி வருத்துகிறது.

முன்னை வினையாகிய பிராரத்தம் இப்பொழுது இவ்வாறு வந்து தாக்குகிறது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

பட்டினத்தார் அவ்வாறுதான் நினைத்தார். அவர் அறிய எந்தத் தவறும் செய்யவில்லை. ஆயினும் அவர்மேல் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டது. அந்தத் துன்பத்தை அனுபவிப்பதற்குரிய எந்தச் செயலையும் இந்தப் பிறவியில் அவர் செய்ததாகத் தெரியவில்லை.

ஆகவே முந்திய பிறவியிற் செய்த வினையே இதற்குக் காரணமாக இருக்கவேண்டும் என்று தெளிந்தார்.

